பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 126

03.11.2026

நான்கு அரசு அலுவலர்கள் மற்றும் ஒரு தனி நபர் நான்கு லஞ்ச வழக்குகளில் கைது

02.11.2026 அன்று விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.பிச்சைமருது என்பவர் மின் சுமையை (Electricity Load) அதிகரித்து கொடுப்பதற்கு கொடுத்த மனு மீது நடவடிக்கை எடுக்க திரு.ராமமூர்த்தி, உதவி பொறியாளர், வீரசோழன் கிராமம், தனக்கு ரூ.2,000/- லஞ்சம் கேட்டு பெற்ற குற்றத்திற்கு கைது செய்யப்பட்டார்.

மற்றும் 03.11.2026 இன்று நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.வசந்த், என்பவர் தனிப்பட்டா வழங்கக்கோரி கொடுத்த மனு மீது நடவடிக்கை எடுக்க திருமதி.உமா பிரியா, கிராம நிர்வாக அலுவலர் பிகாட்டி-I, குந்தா தாலுகா தனக்கு ரூ.1,25,000/- லஞ்சம் கேட்டு பெற்ற குற்றத்திற்கு கைது செய்யப்பட்டார்.

03.11.2026 இன்று தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.தாமோதரன் என்பவர் தனிப்பட்டா வழங்கக்கோரி கொடுத்த மனு மீது நடவடிக்கை எடுக்க திரு.சேர்மபாண்டியன், கிராம நிர்வாக அலுவலர் வெங்கடாம்பட்டி பகுதி-II, ஆலங்குளம் வட்டம், தனக்கு ரூ.4,000/- லஞ்சம் கேட்டு பெற்ற குற்றத்திற்கு கைது செய்யப்பட்டார்.

மேலும் 03.11.2026 இன்று தேனி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.காளிதாஸ், என்பவர் தனிப்பட்டா வழங்கக்கோரி கொடுத்த மனு மீது நடவடிக்கை எடுக்க திருமதி.வித்யா, கிராம நிர்வாக அலுவலர் தேனி தாலுகா மற்றும் தனிநபர் ஆகியோர் தங்களுக்கு ரூ.20,000/- லஞ்சம் கேட்டு பெற்ற குற்றத்திற்கு கைது செய்யப்பட்டார்கள்.

.....

PRESS RELEASE – 126
03.11.2026

FOUR GOVERNMENT OFFICIALS AND 1 PRIVATE INDIVIDUAL ARRESTED IN FOUR BRIBERY CASES

On 02.11.2026, Tr.Ramamoorthy, Assistant Engineer, Veerachozhan Village, was arrested for demand and acceptance of bribe Rs.2,000/- from Tr.Pichaimuthu, Virudhunagar district, for taking action on his petition seeking an increase in the electricity load.

Today 03.11.2026, Tmt.Uma Priya, Village Administrative Officer, Bikkatti-I, Kundha Taluk, was arrested for demand and acceptance of bribe Rs.1,25,000/- from Tr.Vasanth, Nilgris district, for taking action on his petition seeking individual patta.

Today 03.11.2026, Tr. Chermapandian, Village Administrative Officer, Vengadampatti -II, Alangulam Circle, was arrested for demand and acceptance of bribe Rs.4,000/- from Tr.Thamotharan, Tenkasi district, for taking action on his petition seeking individual patta.

Today 03.11.2026, Tmt.Vidhya, Village Administrative Officer, Theni Taluk, was arrested for demand and acceptance of bribe Rs.20,000/- from Tr.Kalidas, Theni district, for taking action on his petition seeking individual patta.
